ஆங்கில மருந்து வகைகள்,
ஆயுள் வேத மருந்து
வகைகள்,
கோவில் அபிஷேகச்
சாமான்கள்.
மற்றும்
நாட்கருமங்களுக்குரிய
சாமான்கள்

தினசரி மாலை வைத்திய
சேவை எல்லாவற்றிற்கும்

சித்தி மெடிக்கல்
சென்ரர்
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

கால் நடை வைத்திய
நிலையம் (தனியார்)

கால்நடை வைத்திய
ஆலோசனை,
செயற்கைமுறைச்
சினைப்படுத்தல்,
கோழிகளுக்கு ஊசிக்கட்,
அம்மை தடுப்பூசி ஏற்றல்
ஆகிய சேவைகளுக்கு

சித்தி மெடிக்கல்
சென்ரர்
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

சுடர் 5: பிரமோதூத ஆனி 15 வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 05 (29-06-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAM'L DAILY கதிர்: 126

# யுத்தத்தை நிறுத்துவதற்கு இந்திய அரசு முயற்சிக்கும்

## தமிழர் உயிரிழப்பைத் தடுக்கவும் பிரதமர் சிங் கருணாநிதிக்கு உறுதி



பிரதமர் வி. பி. சிங்

புதுடில்லி, ஜூன் 29

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், அரசுப் படையினருக்கும் இடையே நடைபெறும் சண்டையை நிறுத்தவும்—

அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழப்பதைத் தடுக்கவும்—இந்தியா புதிய முயற்சிகளை எடுக்க இருக்கிறது.

இது தொடர்பான உறுதி மொழியை பிரதமர் வி. பி. சிங் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கு நேற்று வழங்கினார்.

மோசமடைந்துவரும் இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி முதலமைச்சர் கருணாநிதி நேற்று இரண்டு தடவைகள் பிரதமர் வி. பி. சிங்குடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசினார்.

இலங்கை, வடக்கு-கிழக்கு பகுதியில் தமிழர் இனப்படுகொலைக்கு ஆளாகியிருக்கின்றனர். இதனை நிறுத்துவதற்கான அவசர நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு திரு. கருணாநிதி அப்போது பிரதமர் திரு சிங்கிடம் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

அச்சமயமே பிரதமர் சிங் முன்கண்ட உறுதிமொழியை திரு. கருணாநிதிககு அளித்தார்.

இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படுவதுசம்பந்தமான தகவல் தமக்கும் கிடைத்திருப்பதாகவும் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் பிரதமர் சிங், முதலமைச்சர் கருணாநிதியிடம் மேலும் தெரிவித்தார்.

போராளிகள் தங்களுக்குள் மோதிக்கொள்வது, காட்டிக் கொடுப்பது, வன்முறை-கொலைபோன்ற காரியங்க

(3 ஆம் பக்கம் பார்க்க)



கருணாநிதி

### சுப நேரம்

29-6-90
வெள்ளிக்கிழமை ஆனி 15
சுபநேரம்!
05-56—07-26
இராகுகாலம்
10-26—11-56

## மேலும் 30,000 பேர்களை இராணுவத்தில் சேர்க்க முடிவு

### வடக்கு - கிழக்கில் போராடுவதற்காகவாம்

கொழும்பு, ஜூன் 29

இலங்கை இராணுவப்படைக்கு ஆட்களை திரட்டும் நடவடிக்கையில் இலங்கை அரசு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது.

இதற்காக ''நேரடியாக உள் நுழையும்'' (Walk in Interview) நேர்முகப் பரீட்சைகளை தெற்கில் அரசு நடத்திவருகிறது.

இராணுவத்தில் சேரும் எண்ணத்துடன் பெரும் எண்ணிக்கையான சிங்கள இளைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதாக அறிய வருகிறது.

இதேவேளை—

வடக்கு, கிழக்கில் போராட்டத்தை நடத்துவதற்காக முப்பதாயிரம் பேரைக் கொண்ட இராணுவப் படை ஒன்றைத் திரட்டும் நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபட்டிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கை இராணுவத்தில் புதிதாக ஆட்சேர்ப்பு இடம் பெற்று வருகிறது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

### புதன் இரவு இடம்பெற்ற

## நல்லூர்ஹெலித் தாக்குதல் மேலும் நால்வர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நல்லூரில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் ஷெல் தாக்குதலின் போது காயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தவர்களில் மேலும் நால்வர் மரணமடைந்தனர். இச்சம்பவத்தில் நேற்று நண்பகல்வரை நால்வர் உயிரிழந்து விட்டனர்.

மரணமானோர் விவரம் வருமாறு:-

எஸ். வசந்தகுமார் [வயது 24] அத்தியடி, இவரது சொந்த இடம் கிளிநொச்சி.

சுப்பிரமணியம் கணேசன் (வயது 55) யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகருக்கு மீண்டும் மின்சாரம் கிடைத்தது!

யாழ். நகரப் பகுதிக்கும் அதைச்சூழவுள்ள பகுதிகளுக்கும் நேற்றுப் பிற்பகலில் மின்சாரம்மீண்டும் விநியோகிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை ஹெலிகொப்டரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் யாழ். பல்கலைக்கழக பின்புற வாசலில் உள்ள மின்மாற்றிகள் சேதமடைந்திருந்தன.

சுன்னாகத்தில் இருந்து வரும் 33 கே.வி மின்சாரத்தை 11 கே.வி மின்சாரமாக மாற்றும் மின்மாற்றியே முக்கியமாக சேதமுற்றது.

இதனால் இலங்கை மின்சார சபைக்கு சுமார் ஆறு லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மின் மாற்றிகளில் இருந்த 5 ஆயிரத்து 400 லீற்றர் எண்ணெய் (''ஓயில்''] வீணாகப் போய்விட்டதாகவும், மின் மாற்றிகளின் சில பகுதிகள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



மோதல் நடைபெறாத இடங்களிலும் தாக்கி மக்களை அழிச்சுப் போட்டு, தவறுதலாய் நடந்திட்டுது, கவலைப்படுகிறோம் எண்டு சொல்லுறதுக்கு உது ஒரு முத்தாய்ப்போ......!

### தருமபுரத்தில் நேற்றுக் காலை

## புலிகளின் பதிப்பகம் மீது விமானக் குண்டு வீச்சு

### அநாதை இல்லம் சேதமுற்றது

யாழ்ப்பாணம், ஜூன் 29

கிளிநொச்சி, தருமபுரத்தில் இயங்கி வந்த விடுதலைப் புலிகளின் பதிப்பகம் நேற்றுக் காலை 11 மணியளவில் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்கானது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகை அச்சிடப்படும் பதிப்பகம் அதுவேயாகும்.

இந்தத் தாக்குதலில் பதிப்பகத்துக்கு அருகே இருந்த சஸ்தூரிபா அநாதை இல்லம் சேதமுற்றது. அங்கிருந்த அநாதைக் குழந்தைகள் ஆறு பேர் படுகாயமுற்றனர். அவர்களின் நிலைகவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் போராளிகள் இருவரும் காயமுற்றனர்.

அநாதை இல்லத்தின் மீது நேபாம் குண்டு வீச்சு நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (உ-9)

## தம்பலகமத்தில் புதனன்று விமானக் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 29

தம்பலகமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமானக்குண்டுவீச்சில் மூன்று பொதுமக்கள் காயமுற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது—

விமானக் குண்டுவீச்சைத் தொடர்ந்து 13 ஆம் கட்டை முகாமிலிருந்து வெளியேறி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 4 இராணுவத்தினர் காயமுற்றதாகவும் ஏனையோர் முகாமிற்குள் திரும்பி ஓடிவிட்டதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் மூன்று போராளிகள் சிறுகாயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## விமானிகளின் இலக்கு தவறியதால் மக்கள் பாதிப்பு

### ரஞ்சன் ஒப்புக்கொள்கிறார்

கொழும்பு, ஜூன் 29

வடக்கு, கிழக்கில் இடம் பெற்ற விமானத் தாக்குதல்களின்போது சில சமயங்களில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டதற்கு விமானிகளின் தவறு தான் காரணம்

— இவ்வாறு கூறியிருக்கிறார் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா.

நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விமானத் தாக்குதல்களின் போது இலக்குத் தவறியதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விமானிகளின் தவறு தான் இதற்குக் காரணம் இதற்காக நான் கவலைப்படுகின்றேன்.

பொதுமக்கள் முன்னேற்பாடாக மோதல்கள் நடைபெறும் இடங்களிலிருந்து விலகிச் செல்ல வேண்டும்

— இப்படி அவர் மேலும் சொன்னார். (உ)

## மருந்துப் பொருள்களுடன் யாழ். வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 29

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இரு அதிகாரிகள் கொழும்பிலிருந்து மருந்துப் பொருள்களுடன் இரு வாகனங்களில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

செவ்வாய்க்கிழமை இரவு அநுராதபுரத்தை வந்தடைந்த இவர்கள் புதன்கிழமை காலை புறப்பட்டு 10 மணித்தியாலங்கள் பிரயாணம் செய்து மாலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்தை அடைந்தனர்.

இவர்கள் மூன்று ஸ்ரீலங்கா படை முகாம்களிலும் மூன்று விடுதலைப் புலிகள் முகாம்களிலும் சோதனையிடப்பட்டதாகத் தெரிய வந்தது.

## தமிழக முதல்வர் கருணாநிதிக்கு "புத்திமதி" கூறுகிறார் ரஞ்சன்

கொழும்பு, ஜூன் 29

தமிழக முதல்வர் கருணாநிதிக்கு ஸ்ரீலங்காவின் துணை பாதுகாப்பு அமைச்சர் ''புத்திமதி'' கூறியிருக்கிறார்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக கருணாநிதிக்கு ரஞ்சன் ''புத்திமதி'' கூறியிருக்கிறார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்ட முடிவுகளைபத்திரிகையாளர்களுக்கு வெளியிடுவதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் வைத்தே இந்த புத்திமதிகளை அவர் வெளியிட்டார்.

அங்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா மேலும் கூறியதாவது:—

நேபாம் குண்டுகளை ஆயுதப்படையினர் பயன்படுத்தவில்லை

விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் பொய்யர்கள்; ஏமாற்றுக்காரர்கள்.

வெகுஜன சாதனங்கள் மூலம் உலக நாடுகளை ஏமாற்றி விடுதலைப்புலிகள் எத்தனித்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் பொய்ப் பிரசாரத்தை இந்திய மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டனர். இது கவலை தருகிறது.

நேபாம் குண்டு எந்த ஒரு கட்டத்திலும் பயன்படுத்தப்படவில்லை. விடுதலைப்புலிகள் கூறுவது எல்லாவற்றை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இரவில்வட்டமிட்ட விமானங்கள்

இரண்டு விமானங்கள் நேற்று இரவு ஏழு மணிமுதல் சுமார் அரை மணி நேரம் யாழ்ப்பாணப் பகுதிக்கு மேலாக வட்டமிட்டுச் சென்றன.

## ஆஸ்பத்திரி பணியாளருக்கு நேற்று அவசர அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும்மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலைப் பிரிவில் இயங்கும் யாழ். வைத்தியசாலைப் பிரிவுக்கு உடனடியாக கடமைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர அழைப்பு நேற்று விடுக்கப்பட்டது. நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்து சகல பணியாளர்களும் வேலைக்குக் கட்டாயம் சமுகம் தரவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை யாழ் ஆஸ்பத்திரியில்இருந்த முக்கிய மருந்து வகைகள் மற்றும் தளபாடங்கள் ஆகியன மானிப்பாய் வைத்தியசாலைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளன. (ஒ-10)

## 30 நிமிடங்கள் வங்கி இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளை இன்றுவெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 9-30 மணிவரை மட்டுப்படுத்தப்பட்ட பணக் கொடுக்கல், வாங்கல்களுக்காக திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பாதுகாப்பு நிலைமை சீராக இருந்தால் மட்டுமே இது நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## படையினர் 140 பேர் பலியாம்

கொழும்பு, ஜூன் 29

வடக்கு, கிழக்கில் நடந்து வரும் சண்டையில் படையினர் தரப்பில் இதுவரை 140 பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்று செய்தியாளர்களிடம் இதனைத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தபால் ஊழியருக்கு இன்று சம்பளம், ஊக்குவிப்பு பணம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடமாகாணத் தபால் திணைக்கள ஊழியர்களுக்கு 3 மாதத்துக்கான ஊக்குவிப்புப் பணமும், ஜூன் மாதத்துக்கான சம்பளமும் இன்று முதல் வழங்கப்பட உள்ளன.

இந்தத் தகவலை வடமாகாணதபால்அத்தியட்சகர் திரு. எஸ் எம். சேதுகாவலர் உதயனுக்குத் தெரிவித்தார்.

எனினும் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அத்தியட்சகர் காரியாலயம் மற்றும் எருக்கலம்பிட்டி, காங்கேசன்துறை, கொடிகாமம், மடுக்கோவில் முல்லைத்தீவு முள்ளியவளை, முருங்கன், ஒட்டுசுட்டான், மன்னார் தபால் நிலையங்கள் ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகள் நாளையே வழங்கப்படும் என்று அவர் சொன்னார்.

[ஆம் பக்கம் பார்க்க]

## விமானத் தாக்குதல்களை இந்தியா கண்டிக்கிறது

லண்டன், ஜூன் 29

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் நடைபெற்று வரும் சண்டை குறித்தும் -

மக்கள் நெரிசலாக வாழும் பகுதிகளில் நடத்தப்படும் விமானத் தாக்குதல்கள் குறித்தும்-

இந்த மோதல்களினால் பெரும் எண்ணிக்கையானோர் கொல்லப்பட்டு, லட்சக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந்து அகதிகளாக்கப்பட்டு இருப்பது குறித்தும் இந்திய அரசு கவலை தெரிவித்திருக்கிறது.

நேற்று இந்திய அரசு விடுத்த அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய அரசின் அரசியல் விவகாரக்குழு நேற்று வியாழன் மாலையும், மத்திய அரசின் மூத்த அமைச்சர்கள்குழு நேற்றுக்காலையும்கூடி இலங்கை விவகாரம் குறித்து ஆலோசனை நடத்தியது. அதன்பின்னரே இந்த அறிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால்—

இலங்கையில் சண்டையை நிறுத்துவதற்காக அங்கு நேரடியாகத் தலையிடும் எண்ணம் இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கிற்கு இல்லை என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (சின்னஞ்சிறு விளம்பரம்)

### விற்பனை

புத்தம் புதிய Remington Type - Writer, L33 Ceiling Fan, சிறிய அலுமாரி, கட்டில், மெத்தை, Floor Polisher, பெரிய அளவிலான பிறேம்போட்ட உலகப்படம் ஆகியன விற்பனைக்குண்டு. 37, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (13537)

### தவறிவிட்டன

குருநகர் சந்தைக்கும் முத்திரைச் சந்திக்குமிடையில் இரண்டு கோர்வைத் திறப்புக்கள் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் S. யேம்ஸ் ஆசிரியர் ஜுமுனாசி நல்லூரில் ஒப்படைத்தால் ரூ. 200/:- வீதம் சன்மானம் வழங்கப்படும். (13524)

## இடம் பெயர்வு

குருநகர், ஜூன் 29

ஹெலிக் குண்டு தாக்குதலுக்கு இலக்கான கொக்குவில் ரயில் நிலையப் பகுதி, பொன்னம்மான் கிராம மக்கள் பீதியால் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக சேர். பொன். இராமநாதன் வீதியிலும் மக்கள் இடம் பெயர்ந்து வருவதால் அப்பகுதி வெறிச்சோடிக் காணப்படுகிறது. (அ-51)

## ஹஜ்ஜுப் பெருநாள்

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் நான்காம் திகதி ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடப்படும் என்றுதீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழன் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற விசேஷ மாநாட்டில் இத்தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

துல்ஹஜ் பிறை இம்மாதம் 24 ஆம் திகதி தென்பட்டது என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (எ)

## சீருடையினர் தாக்கு

வவுனியா, ஜூன் 29

வவுனியா, சின்னப்புதுக்குளம் பகுதியில் கடந்த பத்தொன்பதாம் திகதி இரவு பத்து மணியளவில் சீருடையினர் நடத்திய தாக்குதலில் சிலர் காயமடைந்தனர்.

சிறீஸ்கந்தபவனம் மில் உரிமையாளர் சு.சிவநாதன் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளானார். அவருடைய வீட்டில் இருந்து ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பணம், நகைகள் கொள்ளையிடப்பட்டன.

சுற்றாடலில் உள்ள எஸ். வி. ஆர்: மில், ராணி மில், பஞ்சாட்சரம் கடை ஆகியனவும் கொள்ளை இடப்பட்டன என்று கூறப்படுகிறது. (இ-எ)

## பொலிகண்டியில் பெண் காயம்

வல்வெட்டித்துறை ஜூன் 29

கடந்த புதன்கிழமை அதிகாலை 5 30 மணி அளவில் வியாபாரிமூலை இன்பருட்டி சத்கோட்டை, திக்கம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளை நோக்கி கடற்பரப்பிலிருந்து பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

இச் சம்பவத்தில் பொலிகண்டியைச் சேர்ந்த குட்டி அம்மா என்ற பெண்ணுக்கு கையில் காயம் ஏற்பட்டது

இன்னும் சில பொது மக்களும் காயமடைந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (இ-160)

## 25 இடங்களில் இராணுவம் சென்றி

கொழும்பு, ஜூன் 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் 25க்கு மேற்பட்ட இடங்களில் இலங்கை ஆயுதப்படையினர் நிலை கொண்டுள்ளனர் என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. மேலும் சில தினங்களுக்கு இந்த இடங்களில் ஆயுதப்படையினர் நிலை கொண்டிருப்பர் என்றும் கூறப்படுகிறது. (இ எ)

---

## எமது புதிய வெளியீடுகள்

1. ★ முரளி ★ K. R. விஜயா ★ ராதாரவி

★ சிலம்பு ★

(ஒறிஜினல்)

2. ★ வெங்கடேஷ் ★ ரேவதி ★ மஞ்சுளா

★ அன்புச்சின்னம் ★

(ஒறிஜினல்)

குணம் வீடியோ சென்ரர். 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

குறிப்பு: படப்பிரதிகளை (விலைக்கு மட்டும்) பெற்றுக்கொள்ள விரும்புவோர் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## குணம் வீடியோ

கலைவாணி வீதி.
(C. T. B. டிப்போவிற்கு முன்பாகவுள்ள வீதி)
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

[சி-4773]

---

## 11 ஆவது நினைவஞ்சலி



**S. P. குருசாமி**
(பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

பிறப்பு: 15 - 11 - 1923 இறப்பு: 01 - 07 - 1979

திதி: 29 - 06 - 1990

இவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

இவரின் மனைவி, மகள். பேரப்பிள்ளைகள்,
ரமேஸ் (London)
பிரகாஸ் (Swisszerland),
ஆகாஸ், பிரதீஸ், சபேஸ்.

204, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (13540)

---

யாழ். மக்களுக்கு

## புதியதோர் சேவை!

★ குறுகிய காலத்தில் ★

தரமான

கலர் பிலிம் கழுவுவதற்கு

**COSMOS MARKETING SERVICES**

1st Floor, 337, Kasthuriar Road,
Jaffna.

(C/4693)

---

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் 1990 - 07 - 01 ஞாயிற்றுக்கிழமைநடைபெறவிருந்தவருடாந்தப் பொதுக்கூட்டம் தற்போதைய நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. பின்னர் புதிய வருடாந்தப் பொதுக்கூட்டத் திகதி அறிவிக்கப்படும்.

திரு. சு. நாகலிங்கம்
தலைவர்.

திரு. சு. வரதராசேஸ்வரமுதலி
இணைச் செயலாளர்.

(13536)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**இராசரெத்தினம் சின்னம்மா**
(நல்லூர் பிரபல வர்த்தகர்
பொ. இராசரெத்தினத்தின் அன்பு மனைவி)

தோற்றம்: 02 - 04 - 1925 மறைவு: 21 - 06 - 1988

திதி: 29 — 06 — 1990


ஆண்டு இரண்டு சென்றாலும் இன்னும் நீங்கவில்லை எம் துயர் அலைகள் ஆறி விடுத்துப் போன பின்பும் நாம் ஆயிரமாய் கலங்குகிறோம் உங்கள் ஆத்மா சாந்தி அடைய நல்லூர் கந்தனை வேண்டுகிறோம்.

உங்களை நினைவு கூரும்
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கோவில் வீதி.
நல்லூர். [13483]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கனகசபை துரைச்சாமி**
(மின் இணைப்பாளர் பருத்தித்துறை)

ஆண்டவன் படைப்பு: 02 - 01 - 1963 அந்நியர் அழிப்பு: 10 - 07 - 1989

திதி: 29 — 06 — 1990

நினையாத நேரம் அணைந்த
என் அன்பே
நினைக்காத நேரமும்
இல்லையே உங்களையே
ஓராண்டு என்ன
எத்தனை ஆண்டு சென்றாலும்
மாறாது என் துயரம்
இப்பருவந்து உங்களையிழந்து
தவிக்கின்றேன் உங்கள் பிரிவால்
இப்பிறப்பின் உங்கள் நினைவை
எப்படித்தான் மறப்பேனோ
தனிமரமாய் நிற்கின்றேன்
தவிக்குதே என் உள்ளம்
தனிமையிலே கதற விட்டு
நீண்ட துயில் கொண்டதேனோ?

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
மனைவி, து. பிருந்தா, தாய், சகோதரர்கள்,
மாமா, மாமி, மைத்துன, மைத்துனிகள்
பெறாமகன், மருமக்கள், நண்பர்கள்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை. [13535]

---

புதிய

# மெடிக்கர்

## பேன் - கொல்லி மருந்து

## சில நிமிடங்களில் பேன்களை அகற்றும்

தலையில் பேன் தொல்லை எவரையும் எந்த நேரத்திலும் பாதிக்கலாம். ஆனல் பெரும்பாலும் உங்கள் பிள்ளைகளே அந்தத் தொல்லையால் பாதிக்கப்படும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அதனை வெற்றிகரமாக அகற்றி விடச் சிறப்பான ஒரு சிகிச்சை தேவை.

பாவித்துச் சில நிமிட நேரத்தில் புதிய மெடிக்கர் சகல பேன்களையும் ஒழித்து விடுகிறது.



கலபம்:
மெடிக்கர் பாவிப்பது மிகச் சுலபம். ஷம்பூ போல அதைச் சுலபமாகத் தேய்த்து விடுங்கள். நுரைக்கச் செய்து 3 நிமிடங்கள் தாமதியுங்கள். அலசிக் கழுவி மற்றொரு முறை தேயுங்கள்.

பாதுகாப்பு:
மெடிக்கர் பல வருட காலம் ஆராய்ச்சி செய்து தயாரிக்கப்பட்டது. சிறுவரின் சிகைக்கு அது முற்றிலும் பாதுகாப்பானது. சிகையை அது மிருதுவாகவும் ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கும்.

செயல் வன்மை:
6 நிமிடங்களிலேயே மெடிக்கர் பேன்களை நீக்கி விடும். அதன் மிகச் சிறந்த செயல் வன்மையால், ஈரமான தலை மயிரைச் சீப்பால் வாரி விடும் போதே பேன்கள் துவாயில் விழுவதைக்காணலாம். சிகையிலிருந்து பேன்கள் முற்றாக நீங்கிப் போகும்.

விக்ஸ் மற்றும் கிளியெராஸில் தயாரிப்பாளர்கள் மூலம்.

விலை: ரூ. 21/70 முதல்.




RJA 9312

**மெடிக்கர் - பேன்எதிர்ப்புப் பாதுகாவலன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பொறுப்புணர்வு வளரட்டும்

கடந்த திங்கட்கிழமை, ஜூன் 25ஆம் திகதி, யாழ்ப்பாண நகரத்தில், அதன் வரலாறு காணாத விதத்தில் உக்கிரமான விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. வேறு நாட்டுடன் போரிடுவது போல, எட்டு விமானங்கள் கூட்டமாக வந்து பலவித குண்டுகளைப் பொழிந்து தள்ளியதில் நகரின் ஒரு பகுதி சுடுகாடாகிப்போய்க் கிடக்கிறது.

தீக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான பெரியகடைப் பகுதிக் கடைகள் சுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்தன. அதனை அறிந்ததும், யாழ். மாநகரசபையின் தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தீயின் நாக்கு ஏனைய கடைகளுக்கும் பரவி நகரை மேலும் அழித்துவிடக் கூடாது என்ற கடமை உணர்ச்சியுடன் தீயுடன் போராடிய மாநகரசபைப் படையினரைப் பாராட்டுகிறோம்.

போர் விமானங்கள் தங்கள் கொடூரச் செயலை விட்டு நீங்க மனமில்லாமல் தொடர்ந்து குண்டுகளைப் பொழிந்துகொண்டிருந்தன. அவ் வேளையிலும் அவை மூட்டிய தீயுடன் யாழ் மாநகரசபையின் படையினர் தீரத்துடன் போராடிக்கொண்டிருந்தனர்.

குண்டுகள் வெடிக்கும் பயங்கரச் சத்தங்களைத் தாங்க முடியாமல் நகருக்கு ஆறு, ஏழு மைல்கள் அப்பால் உள்ள மக்களே உடல் பதறினார்கள்! உயிர் விநாடிக்குவிநாடி பித்தாய்க் கரைந்து கொண்டிருந்தார்கள்!!

அந்தப் பயங்கரமான நேரத்திலும், பொதுச்சொத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒவ்வொரு பிரசைக்கும் இருக்க வேண்டிய குடியியல் உணர்வுடன், பொறுப்புணர்ச்சியுடன், கடமை உணர்ச்சியுடன், பணியாற்றிய மாநகர சபைப் படையினரின் பணி ஏனையோருக்கு முன்மாதிரியானது.

யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது தீயணைக்கும் இயந்திரத்தின் மீது போர் விமானம் குண்டுவீச முயன்றது. ஆனால் இயந்திரச் சாரதியின் சமயோசித புத்தியால் துரதிர்ஷ்டம் எதுவும் நிகழாமல் தடுக்கப்பட்டது. அடுத்த நாள் செவ்வாய்க்கிழமையும் தீயணைப்புப்படையினர் நகரில் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையிலும், கோட்டையிலிருந்து தீர்க்கப்பட்ட வேட்டுக்கள் அவர்களுக்கு அருகில் வந்து வீழ்ந்தன.

ஆனால் அவர்கள் பயந்து தமது பணியைக் கைவிட்டு ஓடவில்லை. தீப்பிடித்த கட்டடங்களிலிருந்து புகை தானும் வராத அளவுக்கு முறறாக அணைத்து விட்டே சென்றார்கள். எடுத்த பணியை தொடுத்துச் செய்து முடித்தார்கள்.

புகையும் நெருப்பையும் கனலாக்கி அனல் வீசச் செய்யும் தூண்டு சக்தியாக காற்றுச் சுழன்று அடிக்கும் இப் பருவத்தில், போர்விமானங்கள் மூட்டிய தீ மேலும் பரவி நகரம் முழுவதையும் நாசம் செய்யாமல் தடுத்தவர்கள் தீயணைப்புப்படையினர். அவர்கள் ஆபத்தான வேளை என்று பயந்து, ஒதுங்கி, முடங்கி இருந்திருப்பின், போர் விமானங்கள் எதிர்பார்த்ததுபோல முழு நகரமுமே பொசுங்கிப்போயிருக்கக்கூடும்.

தேசத்தைக் காப்பாற்ற வேண்டும், மக்களைக் காப்பாற்றவேண்டும், அவர்கள் சொத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பு உணர்வும், கடமைஉணர்ச்சியும், அவற்றுக்கான மன உறுதியும் ஒவ்வொரு தமிழனுக்கும் இன்றைக்குத் தேவை. அப்போது தான் நாடு நமக்கு என்ன செய்தது என்ற கேள்விக்குப் பதிலாக, நாம் நாட்டுக்காக இதனைச் செய்தோமே என்ற திருப்தி ஏற்பட ஏதுவாகும்.

# கிளிநொச்சி நகரை அண்டிய மக்கள் அனேகர் இடம் பெயர்வு

## பதற்றம் கலந்த அமைதி நீடிப்பு

கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சி நகரையும், நகரை அண்டிய அனைத்துக் கிராம மக்களும் அனேகமாக வெளியேறிவிட்டனர்.

கிளிநொச்சி நகரம், மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது. எந்த நேரம் எதுவும் நடக்கலாம் என்ற ஒரு பதற்றம் கலந்த அமைதி அங்கு நிலவுகிறது.

கரடிப்போக்கு சந்தியில் இருந்து டிப்போ சந்திவரையிலான பகுதியில் மக்கள் நடமாடுவது இடையாது.

அந்தப் பகுதியில் உள்ள அரச அலுவலகங்கள், வங்கிகள், பொதுஸ்தாபனங்கள், ஆகியன மூடப்பட்டு உள்ளன.

கடைகளில் உள்ள பொருள்கள் ஏற்றப்பட்டு கிராமப் பகுதிகளில் இந்த கடைகள் இயங்குகின்றன.

சில அரச அலுவலகங்கள் இடம் மாற்றப்பட்டுள்ள போதிலும் பல அலுவலகங்கள் இடமாற்றப்படாது செயல் இழந்த நிலையில் இருந்து வருகின்றன.

திருநகர், பரவிப்பாஞ்சான், கணேசபுரம், கனகபுரம், கரடிப்போக்கு, இரத்தினபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள் ஸ்கந்தபுரம், முரசுமோட்டை, வட்டக்கச்சி, பரந்தன், உருத்திரபுரம் போன்ற பகுதிகளுக்கு பாதுகாப்பு தேடி இடம் பெயர்ந்துள்ளார்கள்.

இந்த மக்களுக்கு இதுவரை எந்த ஓர் உதவியும் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. (இ-76)

## கிளிநொச்சி ராணுவ முகாம் முற்றுகை நீடிக்கிறது

கிளிநொச்சி ஜூன் 29

கிளிநொச்சி இராணுவ முகாம் கடந்த இரண்டு வாரங்களாக விடுதலைப் புலிகளினால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை இராணுவ முகாம் மீதான அதிகாலைத் தாக்குதலுடன் இந்த முற்றுகை ஆரம்பமாகியது.

இதன் பின்னர் ஹெலிமூலம் இராணுவ வீரர்களோ அல்லது உணவுப் பொருள்களோ முகாமுக்குள் இறக்கப்படவில்லை.

விடுதலைப் புலிகள் முகாமை சுற்றி மிக அருகில் பாதுகாப்பு அரண்களை அமைத்துள்ளனர்.

இராணுவம் வெளியேறாவகையிலும், ஹெலி இறக்க முடியாத படியும் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். (இ-76)

### கிழக்கில்

## நூற்றுக்கும் அதிக சடலங்கள்

கிழக்கில் பாதுகாப்புப் படையினரின் தேடுதல் மற்றும் அப்புறப்படுத்தல் நடவடிக்கையின் போது நூற்றுக்கும் அதிகமான சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அரசு தரப்பினர் இத்தகவலை வெளியிட்டதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது. (இ-எ)

### கல்முனை நகரில்

## அரச அலுவலகங்கள்தீக்கிரை

கொழும்பு, ஜூன் 29

கல்முனை நகரில் கடந்த வியாழன் மூன்று முக்கிய அரசு அலுவலகங்கள் இனந்தெரியாதநபர்களால் எரிக்கப்பட்டன எனத்தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனக்கிளை, தேசிய சேமிப்பு வங்கியின் பிராந்தியப் பணிமனை, பிறப்பு இறப்புப் பதிவு அலுவலகம் ஆகியனவே தீக்கு இரையாகின.

கல்முனை உதவி அரசாங்க அதிபர் ஜனாப் முஹைறதீன் தீயை அணைக்க நடவடிக்கை எடுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## பாடசாலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது

கொழும்பு, ஜூன் 29

மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுகின்றன.

பெற்றோரின் வேண்டுகோளை அடுத்து இந்த நடவடிக்கையை மேலமாகாண சபை எடுத்துள்ளது.

தீய சக்திகள் குழப்பம் விளைவிக்கலாம் என்ற சந்தேகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பாடசாலைகளில் பலப்படுத்தும்படி பெற்றோர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (இ-எ)

### அராலி துறையில் ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம் ஜூன் 29

அராலித்துறைப் பகுதியில் நேற்று முன் தினம் புதன் கிழமை மாலை 5 மணியளவில் ஹெலியில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

தீவுப்பகுதிக்கான பிரயாணம் பண்ணைப் பாதையால் செல்ல முடியாததால் அராலிப் பாதைக் கூடாகவே நடைபெற்று வந்தது.

இதைத் தொடர்ந்து தீவுப் பகுதி மக்கள் பிரயாணம் செய்ய அச்சம் கொண்டுள்ளனர். (இ-3)

## செயலக ஊழியர்கள் கடமை அரச அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்- செயலக ஊழியர்கள் எங்கே தமது கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்று அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பணிப்புரை வழங்கியுள்ளார்.

செயலக ஊழியர்களின் கடமை தொடர்பாக அவர் விடுத்துள்ள பணிப்புரையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

''யாழ், கச்சேரியில் சமூக சேவைப்பகுதி உணவுக்கிளை, கணக்குப்பகுதி ஆகியவற்றில் கடமையாற்றும் ஊழியர்கள் கட்டாயமாக யாழ். கச்சேரிக்குச்சமுகமளிக்க வேண்டும்,

யாழ். கச்சேரிக்கு அண்மையில் வசியாது மற்றைய பகுதிகளில் வசிக்கும் யாழ் கச்சேரி ஊழியர்கள் தத்தமது பகுதியில் உள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் தற்காலிகமாக கடைமையாற்றலாம்.

எனினும் தகுந்த குறுகிய அறிவித்தலில் அவர்கள் யாழ். கச்சேரியில் கடமையாற்ற வருவதற்குத்தயாராக இருத்தல் வேண்டும் யாழ். கச்சேரிக்குப்புறம்பாக உதவி அரசாங்க அதிபர் அலுவலங்களில் இந்த ஒழுங்குகளின் படி தற்காலிகமாகக் கடமையாற்றுபவர்கள்' தத்தமது பகுதி உதவி அரசாங்க அதிபர் மூலம் யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவிக்க வேண்டும் (இ-3)

### உணவுப் பொருள்களுடன் தலைமன்னாருக்கு கப்பல்?

கொழும்பு, ஜூன் 29

அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று கடந்த புதன்கிழமை மாலை கொழும்பில் இருந்து தலைமன்னார் இறங்குதுறையை நோக்கிப்புறப்பட்டுச் சென்றதாகக் கொழும்புச்செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

### திருமலையில் தற்போதுள்ள

# தமிழரை பாதுகாக்கும் பொறுப்பை கேட்கின்றன தமிழ்க் குழுக்கள்

## தளபதி கொப்பேக்கடுவ முடியாது என்கிறார்

கொழும்பு ஜூன் 29

திருகோணமலையில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் வசிக்கும் தமிழர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்குமுகமாக, அப்பகுதிகளில் காவல்காக்கும் பொறுப்பைத் தங்களிடம் ஒப்படைக்கும்படி ஈ.பி ஆர் எல்.எவ், ஈ.என்.டி.எல் எவ் ஆகிய இயக்கங்களைச்சேர்ந்தவர்கள் இலங்கை இராணுவ உயர் அதிகாரிகளுக்கு விடுத்த வேண்டுகோள் பூரணமாக நிராகரிக்கப்பட்டு விட்டது.

இப்படி கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது-

பொலீஸாரையும் இராணுவத்தினரையும் தவிர வேறு எவரும் ஆயுதங்கள் கொண்டு செல்லத் தான் அனுமதிக்கப் போவது இல்லை என்று கிழக்கு மாகாண இராணுவத் தளபதி டென்சில் கொப்பேக்கடுவ கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ எ)

### மீனவர் பலி

தாளையடி, ஜூன் 29

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மீனவர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள கடற்பகுதியில் புதன்கிழமை காலை நடைபெற்றது.

மருதங்கேணியைச் சேர்ந்த கதிர்காமு விஜயரட்ணம் (வயது 30) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே மரணமானவர் ஆவார்.

அவருடன் கூடச் சென்றவர் படகில் இருந்து கடலி... மாக உயிர் தப்பினார். (இ-144)

### தபால் திணைக்கள

## கணக்காளர் அலுவலகம் மானிப்பாய்க்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன்,29

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி அலுவலகம் இருக்கும் கட்டடத்தின் மூன்றாவது மாடியில் இயங்கி வந்த தபால் திணைக்களத்தின் கணக்காளர் அலுவலகம் மானிப்பாய்க்கு மாற்றப் பட்டுள்ளது.

இவ் அலுவலகம் நேற்று முதல் மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்திற்கு அருகில் உள்ள றியல்ஸ் இன்ஸ்ரிரியூஷன் சென்ரர் ... தில் இயங்க ... ளது. (இ-மு-9)

### தபாலக பணியாளருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மத்திய தபால் அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், உப தபால் அதிபர்கள், சிற்றூழியர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை யாழ் மத்திய தபால் அலுவலகத்துக்கு சமுகம் கொடுக்குமாறு பிரதம தபால் அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-10)

### கிழக்கில் மேலும் மூன்று புதிய முகாம்கள்

கொழும்பு,ஜூன் 29

கிழக்கில் கல்முனை, காரைதீவு, சவளக்கடை ஆகிய இடங்களில் இராணுவ முகாம்கள் மீண்டும் அமைக்கப்பட்டிருப்பதாகபாதுகாப்புஅமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது. [உ-எ]

### ஒத்திவைப்பு

சுழிபுரம், ஜூன் 29

வழக்கம்பரை அம்மன் கோவில் திருவிழா பின் போடப்பட்டுள்ளது. (இ-28)

### திருமலையில் இருந்து

## படகுகளில் வரும் அகதிகளை படையினர் தாக்குகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 28

திருகோணமலையில் இருந்து படகுகளில் முல்லைத்தீவை நோக்கி வரும் அகதிகளை கடற்படையினர் அடித்து துன்புறுத்திவருகின்றனர்.

இந்தச் சம்பவங்களில் மண்டை உடைந்த நிலையில் பெண்கள் பலர் செம்மலைக்கு வந்துள்ளனர்.

செம்மலை அகதி முகாமில் தங்கியுள்ள செஞ்சிலுவைச் சங்க வைத்திய குழு அவர்களுக்கு உடனடி சிகிச்சைகளை அளித்தது.

கடற்படையினர் படகுகளை வழி மறித்து படகில் இருப்போரை முகாமுக்குக் கொண்டு சென்று தாக்குவதாக அகதிகள் தெரிவிக்கின்றனர். (இ-3)

### சாரதிகாயம்

யாழ்ப்பாணம் ஜூன் 29

பலாலி இராணுவமுகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல்லுக்கு வாகன சாரதி காயமடைந்தார்,

மயிலிட்டிச் சந்தியில் இச் சம்பவம் நடந்தது. காயமடைந்தவர் சி. சிவகுமார் (32 வயது) (இ-3)

## வெளி மாவட்டங்களிலிருந்து 3000 குடும்பங்கள் வருகை,

யாழ் - மாவட்டத்துக்கு வெளிமாவட்டங்களில்இருந்து மூவாயிரம்குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து நேற்று வரை மூவாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளதாக செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அத்தநேரம் யாழ் மாவட்டத்துக்குள் 30 ஆயி...து373 குடும்பங்களைச்சேர்ந்த 1லட்சத்து 51 ஆயிரத்து 565 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் புள்ளி விபரங்கள் தெரிவித்தன. (இ 3)

### 9 ஈழத் தமிழர் திருச்சியில் கைது

சென்னை, ஜூன் 29

உரிய ஆவணங்கள் வைத்திருக்காத ஒன்பது இலங்கைத் தமிழர்கள் திருச்சியில் வைத்து நேற்றுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். (ஓ எ)

### வீட்டை விட்டு ஓடிய நாம்

# திரும்பி வந்து பார்த்தபோது தாயார் பிணமாகக் கிடந்தார்!

## திருமலை நகரிலிருந்து வந்த இளைஞனின் அனுபவம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

படையினர் வருவதை அறிந்ததும் நாங்கள் வீட்டை விட்டு ஓடிச் சிறிது தூரத்தில் போய் மறைந்து நின்றோம். வீட்டில் எனது தாயாரும், மைத்துனர் ஒருவருமே இருந்தனர். நாம் திரும்பிச் சென்று பார்த்த போது தாயார் கொல்லப்பட்டிருந்தார். அவரது சடலத்தை தூக்கிக் கொண்டு சுமார் ஒன்றரை மைல தூரத்தில் உள்ள பாலையூற்று மாதா கோவிலுக்கு நடந்து வந்தோம்.

திருகோணமலை, லிங்க நகரைச் சேர்ந்த முகுந்தகுமார் (32 வயது) தமது குடும்பத்துக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை மேற்கண்டவாறு விவரித்தார்.

முகுந்தகுமாரின் தந்தையார் அருணாசலம் முருகையா 1983 இனக்கலவரத்தின்போது திருகோணமலையில் குண்டர்களால் டாக்சியால் மோதிக் கொல்லப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் திருமதி அருணாசலமும், 6 பிள்ளைகளான முகுந்தகுமார் (32 வயது), முகுந்தவேணி (30 வயது). முகுந்தசாந்தி (28 வயது), முருகன்குமார் (26 வயது), முகுந்தஈஸ்வரி (24 வயது), முரளிகுமார் (22 வயது) ஆகியோரும் லிங்க நகரில் வசித்து வந்தனர்.

குடும்பத்தில் மூத்தவரான முகுந்தகுமார் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

கடந்த 14 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி இருக்கும். படையினர் வருகிறார்கள் என அறிந்தோம். எமது தாயார் நவமணி தமக்கு தலைசுற்றுவதாகக் கூறி வீட்டிலே இருந்துவிட்டார். அவருடன் மைத்துனர் ஒருவரும் நின்றார்.

நாங்கள் அங்கிருந்து சிறிது தூரம் ஓடிச் சென்று மறைந்து நின்றுவிட்டு மீண்டும் வீட்டுக்குத் திரும்பி வந்தோம். தாயார் உடலில் நீலம் பாய்ந்த நிலையில் இறந்து கிடந்தார். துப்பாக்கியின் ''பயனெட்''டால் அவர் குத்தப்பட்டிருந்தார். மைத்துனர் அந்நேரம் படையினரிடம் கைப்படாது தப்பிச் சென்றிருந்தார்.

14 ஆம் திகதி பொழுது பட்டபின் நாங்கள் தாயாரின் சடலத்தைத் தூக்கிக்கொண்டு சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள பாலையூற்று மாதா கோவிலை அடைந்தோம். இரவு 7.00 மணி அளவில் தாயாரின் சடலத்தை அடக்கம் செய்தோம்.

பாலையூற்றில் இருந்து 15 ஆம் திகதி அதிகாலை 2.00 மணிக்குப் புறப்பட்டு சைக்கிள்களிலும், நடையிலுமாக நிலாவெளியை அடைந்தோம்.

நிலாவெளியில் இருந்து படகு மூலம் முல்லைத்தீவு வந்து சேர்ந்தோம். முல்லைத்தீவில் இருந்து பஸ் மூலம் யாழ்ப்பாணம் வந்தோம்.

இப்படி அவர் கூறினார். (இ)

### நல்லூர் ஹெலி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவர்.

எஸ். விஜயபிரகாஷ் (வயது 23) சங்கிலியன் வீதி, நல்லூர்.

இமனுவல் பத்மன் (வயது 18) யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவைச் சேர்ந்தவர்.

சம்பவம் நடந்த அன்று இரவே கந்தர்மடம் பழம் றோட்டைச் சேர்ந்த செல்வராஜா ஸ்ரீமுகுர்ந்தன் (வயது 21) என்பவர் உயிரிழந்து விட்டார் என்பது தெரிந்ததே.

நேற்று ஆஸ்பத்திரியில் மரணமானவரில் ஒருவரான பத்மன் என்ற இளைஞன் திங்கட்கிழமை நகரில் நடந்த குண்டு வீச்சுத் தாக்குதலைத் தொடர்ந்து தமது வீட்டிலிருந்து இடம்பெயர்ந்து நல்லூரில் வசித்து வந்தார். புதன்கிழமை தமது வீட்டுக்குச் சென்று அதனைப் பார்வையிட்டுவிட்டு திரும்பி வரும் பொழுதே ஹெலித் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார். இத்தகவல்களை அவரது தகப்பனாரே உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-10)

### யாழ். நகரிற்கு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது

எனினும் மின்மாற்றிகளில் ஏற்பட்டசேதங்களைமின்சார சபை ஊழியர்கள் துரிதமாக திருத்தியதனால் நேற்றுப்பிற்பகலே மின்சாரம் மீண்டும் கிடைத்தது. (உ-3)

### யுத்தத்தை--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளில் ஈடுபடுவதைத் தமிழக மக்கள் கண்டிக்கிறார்கள் —

அதேவேளையில் இலங்கை இராணுவ விமானங்கள்மூலம் குண்டுவீசி அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்வதையும் தமிழக மக்கள் கண்டிக்கின்றார்கள்—

இலங்கைத் தமிழ் மக்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்று தமிழக மக்கள் ஏகோபித்துக் கோருகிறார்கள் —

—என்ற நிலைப்பாட்டையும் திரு. கருணாநிதி பிரதமர் சிங்குடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட போது எடுத்துச் ...ன்னார். [அ-எ]

### மேலும்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்று கடந்த வியாழக்கிழமை காலிமுகத்திடல்பகுதியில நடைபெற்றது.

சுமார் 12 ஆயிரம் இளைஞர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர் என்று அரசு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன. (அ-எ-9)

### குழந்தையை நழுவவிட்ட பெற்றோர்

தாளையடி, ஜூன் 29

திருமலையிலிருந்து அகதிகளாக வடமராட்சி கிழக்கிற்கு வந்த இளம் குடும்பத்தினர் தமது ஒரே ஒரு குழந்தையை கைநழுவவிட்டு வந்து சேர்ந்துள்ளனர்.

திருமலையில் போர் மூண்ட போது, பீதியினால் சிதறி ஓடிய சமயம் குழந்தை கை நழுவிவிட்டதாகக் கூறப்படுகிறது

இக்குடும்பத்தினர் தற்போது கட்டைக்காட்டில் உள்ள அகதிகள் முகாமில் தங்கி உள்ளனர். (இ-144)

### மாதுரிதேவி காலமானார்

சென்னை, ஜூன் 29

பழம்பெரும் தமிழ் நடிகை மாதுரிதேவி கடந்த புதன் கிழமை சென்னையில் காலமானார். அவருக்கு வயது 65 (ஓ-எ)

### கலவரம்

லுஸாக்கா, ஜூன் 29

ஸாம்பியவின் பல பகுதிகளில் உள்நாட்டுக் கலவரம் நேற்று ஏற்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை அரசு அதிகரித்ததற்கு ஆட்சேபம் தெரிவித்து மக்கள் தலைநகர் லுஸாக்காவில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

லுஸாக்காவில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

### படையினர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஆயுதப்படையினர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளவில்லை. பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதில் படையினர் அவதானமாக உள்ளனர் — என்றும் அவர் கூறினார். (ஓ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய
உணவுத் திட்டத்திற்கு உகந்தது.

" ஜீவாகாரம் "

இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளன.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

# உதயன்

29 - 6 - 1990 வெள்ளிக்கிழமை

15 கிறாம்
அண்ணா கோப்பி
100 வீதம் சுத்தமானது

இது கைதேர்ந்த தொழிலாளர்களினால் காற்றுப்புகாவண்ணம் அடைக்கப்பட்ட பைக்கட்டுகளில் வெளிவருகிறது. இதை வாங்கிப் பாவித்து.

இதன் வெற்றுப் பைக்கட்டுகள்
25 கொடுத்து ஒரு அப்பியாசக்கொப்பியை
இனாமாகப் பெற்றுக் கொள்ளவும்.

### யாழ்ப்பாணத்தில் சிக்கி உள்ள

## வெளிநாட்டவர்களை கொழும்பு அனுப்ப முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 29

கொழும்பு செல்லமுடியாது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள 46 வெளிநாட்டவர்களை கொழும்புக்கு அனுப்ப செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

வெளிநாட்டவரும், வெளிநாட்டுப்பாஸ் போட்டுடன் உள்ள தமிழருமாக 46 பேர் கொழும்பு செல்ல முடியாது உள்ளனர்.

இவர்களைக் கொழும்புக்கு அனுப்ப வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இவர்களை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 30 மணிக்கு கண்டுக்குழி செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துக்கு வருவாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

## சிற்ப வேலைக்கு சென்றவர் ஹெலி சுட்டு மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வேலைக்குச் சென்றவரைக் காணவில்லையே என்று தேடியபோது அவர் ஹெலிச் சூட்டுக்குப் பலியான விடயம் தெரியவந்தது.

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த வி. கயிலாயநாதன் (35 வயது) என்பவர் கோயில் சிற்பவேலைக்கு புதன்கிழமை காலை சுன்னாகம் புறப்பட்டார்.

நேற்று வியாழன் காலை வரை அவர் வீடு திரும்பவில்லை. அவரது சகோதரர்கள் தேடிச்சென்றபோது அவர் சுன்னாகத்தில் ஹெலித் தாக்குதலில்சிக்கி மரணமான விடயம் தெரியவந்தது.

மானிப்பாய் வைத்தியசாலையில் அவரது சடலம் அடையாளம் காணப்பட்டது. (இ-3-10)

### நல்லூரில் காயமடைந்தோர்

நேற்று முன்தினம் இரவு நல்லூரில் இடம்பெற்றஹெலி ஷெல் வீச்சில் காயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்போர் பெயர் விபரம் வருமாறு:-

இ. விஜயகுமார் (வயது 38) ஆறுகால் மடம், யாழ்ப்பாணம்,

தம்பையா சிவசாமி (வயது 65) முத்திரைச்சந்தை,

மா.இராசதுரை (வயது 39) ஓட்டுமடம்,

ஆறுமுகம் வேலு (வயது 50) கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (ஒ-10-3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் றஞ்சன் [சுரேஷ்]

அன்னை மடியில்: 27 - 02 - 1968
ஆண்டவன் அடியில்: 29 - 06 - 1989

திதி: 18 - 06 - 1990

தமிழ் ஈழம் மலர்வதற்கு உழைப்பை நல்கித்
தளராது போரிட்டாய்; தருக்கர் தம்மை
இறுதிவரை எதிர்த்த மறவேங்கையே நீ
இம் மண்ணின் உயிர்மூச்சாய் என்றும் வாழ்வாம்
ஒரு நாளில் தமிழ் ஈழம் மலரும் போது
உன் வீரம் கொடிகட்டிப் பறக்கக் காண்போம்
உயிரிலும் மேலாகத் தமிழ் ஈழத்தை
உத்தமனே நேசித்தாய், உயிரை ஈந்தாய்
உன் பெருமை உலகுள்ள காலம் வரை வாழும்
நீ என்றும் வாழ்ந்திடுவாய் எம் இதயந்தன்னில்;

தந்தை, தாய், சகோதரிமார், சகோதரன்மார், மச்சான்மார், மச்சாள், மாமன்மார், மாமிமார், சிறியதாய்மார், நண்பர்கள்.

"தாயகம்"
பன்னாலை, தெல்லிப்பளை. (13558)

## அவசர நோயாளர் மட்டும் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

"மானிப்பாயில் தற்காலிகமாக இயங்கும் யாழ்-போதனா வைத்தியசாலைக்கு அவசர சடும் நோயாளர்களை மட்டுமே அனுப்ப வேண்டும். மற்றவர்களுக்கு மாவட்ட வைத்தியசாலைகளிலேயே சிகிச்சை அளிக்க வேண்டும்.

இப்படியான கோரிக்கை ஒன்றை வடபிரேதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை சகல வைத்தியசாலை அதிகாரிகளுக்கும் விடுத்துள்ளார்

அவர் தமது கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்- போதனா வைத்தியசாலை தற்காலிகமாக மானிப்பாயில் இயங்கி வருகிறது. இங்கு நோயாளர்கள் அதிகமாகச் செல்கிறார்கள். இதனால் பல அசௌகரியங்களை நோயாளர்களும், சுகாதார சேவைத்திணைக்கள ஊழியர்களும் எதிர் நோக்குகின்றனர்;

எனவே சகல வைத்தியசாலை அதிகாரிகளும், ஊழியர்களும் தங்கள் சிரமத்தைப்பாராது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். (இ-3)

## உணவுப் பொருள்களை அரசு அனுப்பியுள்ளதாம்

கொழும்பு, ஜூன் 29

போக்குவரத்துச் செய்ய முடியாத ஒரு சில இடங்களைத் தவிர வடக்கு-கிழக்கு மாகாணத்தின் சகல பகுதிகளுக்கும் போதுமான உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்படி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சரித்தா ரத்வத்தை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்குக் காங்கேசன்துறை துறைமுகத்திற்கும், மன்னாருக்குத்தலைமன்னார் துறைமுகத்திற்கும் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் திரு. ரத்வத்தை சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் 25,000 குடும்பங்களும், திருகோணமலையில் 20,000 குடும்பங்களும் ஏனைய மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கான அகதிகளுமாக மொத்தம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்கள் அகதிகளாகி உள்ளதாக திரு. சரித்தா மேலும் சொன்னார். (அ-எ)

## சுழற்சி முறையில் மின்சாரம் யாழ் நகரில் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 11 கே. வி மின்சாரத்தைக் கடத்தும் மின் இணைப்புகள் சேதமடைந்தன.

இவற்றைத் திருத்த மின்சாரசபை ஊழியர்கள் அச்சம் தெரிவித்துள்ளதால் நகரத்தின் முக்கிய பகுதிகளுக்கு சுழற்சி முறையிலேயே தற்போது மின்சாரம் வழங்கப்படுகிறது.

புதன்கிழமை முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலாலி வீதி' ஆரியகுளம், கொன்வென்ட் (மடத்தடி), றக்கா வீதி, வைமன் வீதி, நல்லூர், கனகரத்தினம்)நாவலர் வீதி), அரியாலை, உப்புக்குளம், புங்கங்குளம், பாசையூர் ஆகிய பகுதிகளில் உள்ளமின்மாற்றிகள் ஊடாக மின்சாரம் பெறுபவர்களுக்கே சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படுகிறது. (1-3

## நேற்றும் தகவல் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 29

மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட கிழக்கிலங்கை பல்கலைக்கழக மாணவர் குறித்து யாழ். அரசாங்க அதிபருக்கோ, யாழ். பல்கலைக்கழக உபவேந்தருக்கோ நேற்றுப் பிற்பகல் வரை எவ்வித தகவலும் கொழும்பிலிருந்து கிடைக்கவில்லை.

## காங்கேசனில் ஷெல் தாக்கு இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம் ஜூன் 29

காங்கேசன்துறை இராணுவ முகாமில் இருந்து நேற்று ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஷெல் வீச்சில் காயமடைந்த இரண்டு பேர் மானிப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஷெல் குண்டுகள் தோட்ட வெளிகளிலும் விழுந்துவெடித்தன என்றும் காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு வந்தவர்கள் தெரிவித்தனர். (ஒ-10)

## அடுத்த சார்க் மாநாடு மாலைதீவில் நடக்கும்

### இலங்கை விட்டுக் கொடுத்தது

கொழும்பு, ஜூன் 29

சார்க் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டை இந்த ஆண்டு மாலைதீவில் நடத்துவதற்கு இலங்கை அரசு ஒப்புகொண்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இது பற்றி தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஏஜன்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

சார்க் மாநாட்டை எங்கு நடத்துவது என்பது பற்றி இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையே இழுபறி ஏற்பட்டிருந்தது தெரிந்ததே.

### நிவாரண-வைத்திய வேலைகள்

## செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடக்கு கிழக்கு மாகாண நிவாரண வைத்திய வேலைகளைக் கவனிக்கும்பணி செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் செஞ்சிலுவைச்சங்க லீக்கினால் இந்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் பிரதான வதிவிடத்தைக்கொண்டு இயங்கி வருகின்றனர். மட்டக்களப்பு, திருகோணமலை ஆகியஇடங்களிலும் இக்குழுவின் பிரதிநிதிகள் செயற்படுகிறார்கள்.

### ஆஸ்பத்திரி மூடப்பட்டதால்

## கிளிநொச்சிப் பகுதியில் நோயாளிகள் அவதி

கிளிநொச்சி, ஜூன் 29

கிளிநொச்சி மாவட்ட அரச ஆஸ்பத்திரி கடந்த 14 ஆம் திகதி இராணுவ தாக்குதலை தொடர்ந்து மூடப்பட்டுள்ளது.

இதே வேளை இங்குள்ள பல தனியார் மருத்துவமனைகளும் மூடப்பட்டுள்ளன.

இதனால் நோயாளர்களும், இராணுவ நடவடிக்கைகளின் போது காயம் அடைவோரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து வசதி இல்லாமையினால் [illegible] உள்ள மருத்துவமனைகளுக்கும் [illegible] இருந்து வருகிறது (இ-76)

### தபால்:..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காரியாலயங்களுக்குப் பொறுப்பான தபால் அதிபர்களே வந்து சம்பளப் பட்டியலையும், [illegible] களையும் பெற்றுச்செல்ல வேண்டும் என்று [illegible] வித்தார். [உ-9]

### தமிழக முதல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் நம்பக் கூடாது. என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதியைக் கேட்டுக் கொள்கின்றேன்.

கொடுத்த உறுதிமொழிக்கு மாறாகச் செயற்பட்டு ராஜீவ்காந்தி அரசுக்குத் துரோகஞ் செய்த அதே விடுதலைப் புலிகள்தான் இந்திய அமைதிப்படையை எதிர்த்துப் போராடி 1,500 இந்திய வீரர்களைக் கொலை செய்ததுடன் சுமார் 3 ஆயிரம்வீரர்களைக் காயப்படுத்தினர்.

இந்திய அமைதிப்படையினர் இலங்கையில் நிலைகொண்டிருப்பதற்கு 50கோடி அமெரிக்க டாலரை இந்தியா செலவு செய்ததற்கும் விடுதலைப்புலிகள் தான் காரணம்.

ராஜீவ்காந்தியும் தற்போதைய பிரச்சினை குறித்துச் சில அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்

இந்திய இராணுவத்திற்கு எதிராக மோதிய அதே கொலைகாரர்கள்தான் இந்த விடுதலைப்புலிகள் என்பதை திரு. ராஜீவ்காந்தி மறந்துவிடக்கூடாது.

எவரிடமிருந்தும் எந்த உதவியையும் இலங்கை கேட்கவில்லை.

எமக்குத் தேவையான ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் உலகச் சந்தையில் இருந்துதான் நாம் கொள்வனவு செய்கிறோம்.

மக்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள் என முதலமைச்சர் கருணாநிதி அறிக்கை விடுத்திருக்கின்றார்.

விடுதலைப்புலிகளின் உயிர்களைப்பற்றி அக்கறைகொண்டுள்ள கருணாநிதி, சென்னையில் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டபோது என்ன செய்துகொண்டிருந்தார்?

இத்தகைய படுகொலை அங்கு இடம்பெற முதலமைச்சர் ஏன் இடமளித்தார்?

மாலைதீவில் இருந்து புதுடில்லி திரும்பியதும் பிரதமர் வி. பி. சிங் விடுத்த அறிக்கைக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

அண்டை நாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடாது என்று திரு. வி. பி. சிங் அந்த அறிக்கையில் கூறியிருந்தார்.

## இராணுவ தாக்குதல்களை ஆசிரியர்சங்கம் கண்டிக்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 29

தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளதாவது.

குடிமக்கள் வாழும் பகுதிகளில் விமானங்கள், ஹெலிகள் மூலமும் குண்டுகளை வீசியும், ஷெல்களை ஏவியும் அப்பாவி மக்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கொல்லப்படுவதைக் கண்டிக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-3]

## அமெரிக்கா ரூ. 1 கோடி உதவி

கொழும்பு. ஜூன் 29

தற்போதைய நெருக்கடி காரணமாக வடக்கு-கிழக்குப் பகுதியில் இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அமெரிக்க அரசு ஒரு கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இலங்கை அரசு விடுத்த அவசர வேண்டுகோளை ஏற்று இந்த உதவியை வழங்க அமெரிக்க அரசு முன்வந்திருப்பதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு. டெரக்ஷர் அறிவித்திருக்கிறார். (உ-எ)

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983
காரியால்ய இடமாற்ற
அறிவித்தல்

மேற்படி காரியாலயம் பாதுகாப்பற்ற சூழ் நிலையால், இல 148, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலிருந்து தற்காலிகமாக பின்வரும் விலாசத்திற்கு 01 – 07 - 1990 தொடக்கம் மாற்றப்பட்டுள்ளதை அறிவித்துக் கொள்கிறோம்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983
No 374 (New No 982)
பருத்தித்துறை வீதி,
(நல்லூர் சந்தை அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

இந்த இடமாற்றத்தை இயக்குநர் சபை உறுப்பினர்களும் காரியாலய உத்தியோகத்தர்களும், தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.

ஏராளமான அகதிகள் திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பிற மாவட்டங்களிலிருந்து வந்திருப்பதால், புதிய, பாவித்த நல்ல உடுப்புக்கள் அன்பளிப்பு செய்ய விரும்புவோர் எமது காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

கு. கிட்னர்
செயலாளர்

27-06-90

[சி-4772]

## மரண அறிவித்தல்கள்

### சாந்திரட்ணம் விஜயபிரகாஷ்

சாந்திரட்ணம் விஜயபிரகாஷ் (எழுது வினைஞர், பிரதேச நிர்வாக அலுவலகம், அஞ்சல் திணைக்களம் யாழ்ப்பாணம்), யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவன் அகால மரணமானார். இவர் திரு. சாந்திரட்ணம், திருமதி கமலரஞ்சனி சாந்திரட்ணம்,ஆகியோரது அன்புப் புதல்வரும், திரு. சந்திரபிரகாஷ் (எழுது விலைஞர், பிரதேச நிர்வாக அலுவலகம், அஞ்சல் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஜெயப்பிரகாஷ், துஷ்யந்தன், அபிராமி, அஜந்தன் ஆகியோரது சகோதரரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (29-06-90) காலை 9 மணியளவில் அவரது வீட்டில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
சாந்திரட்ணம்.

சங்கிலியன் வீதி,
நல்லூர் (13542)

### பத்மன் இம்மானுவேல்

31 B, 4ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பத்மன் இம்மானுவேல் 27 - 06 - 90 அன்று அகால மரணமானார்.

இவர் இம்மானுவேல் (Retired Store Keeper) வயலற் ஆகியோரின் அருமைப் புதல்வனும், வசந்தன் (Canada), வசந்தி, மெலிற்றா (H. F. C. Jaffna) தயாளன், சுகந்தன் (St. Patricks), ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து (29 - 06 - 90) இன்று காலை 8 மணிக்கு அடைக்கல மாதா கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
P. அந்தோனிப்பிள்ளை

31 B, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [13541]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org